பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 06 செவ்வாய்க்கிழமை 22.09.2020 கதிர் 187

## ஒரு ரூபா பெறுமதியான கொக்கேயின் பொதி மீட்பு

பயாகல, ஹிஸ்பன் கடற்கரையில் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான கொக்கேன் பொதி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகின்றது.

இன்று காலை பயாகல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தப் பொதி மீட்கப்பட்டுள்ளது. இந்தப் பொதியில் இருந்து ஒரு கிலோவிற்கு அதிகமான கொக்கேன் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சுமணரத்ன தேரரைக் கைதுசெய்யுமாறு கோரி மட்டக்களப்பில் இன்று போராட்டம்





மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளைத் தாக்கியமையைக் கண்டித்தும், தேரரைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தியும், தமிழர் பாரம்பரிய காணிகளைப் புராதன பூமி என்ற பெயரில் கையகப்படுத்துவதை நிறுத்துமாறு கோரியும்

2

## ‘20’ ஐ ஆதரிக்க 20 எம்.பிக்கள் கட்சி தாவுவர்!

கொழும்பு, செப் 22

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஆதரவளிப்பதற்காக எதிரணியைச் சேர்ந்த 20 எம்.பிக்கள் அரசுடன் இணையவுள்ளனர் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

2

# எதிரணியின் எதிர்ப்புக்கு மத்தியில் ‘20’ திருத்தம் இன்று நாடாளுமன்றில்

## சமர்ப்பித்தார் நீதி அமைச்சர் அலி சப்ரி





**கொழும்பு, செப்ரெம்பர் 22**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு தயாரித்த அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

**எதிர்க்கட்சிகளின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் நீதி அமைச்சர் அலி சப்ரியினால் குறித்த திருத்தச் சட்ட வரைவு இன்று பிற்பகல் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.**

2

## ‘20’ இற்கு எதிராக இன்று மனு

கொழும்பு, செப்.22

முன்மொழியப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக சட்டத்தரணி இந்திக்க கால்லகே உயர்நீதிமன்றத்தில் இன்று மனுஒன்றைத் தாக்கல் செய்தார்.

20 ஆவது திருத்தத்தை வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாது என்று சவால் விடுத்தே சிறப்பு விண்ணப்பம் ஒன்றை அவர் தாக்கல் செய்துள்ளார்.

2

## பூஜிதவின் வாக்குமூலத்தைக் கேட்க ஆணைக்குழுவுக்கு வந்த மைத்திரி!

### ஒக்ரோபர் 5இல் அவருக்கு அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க ஆஜராகியிருந்த நிலையில், அதனைக் கேட்பதற்காக, மைத்திரிபால சிறிசேன, தனது சட்டத்தரணியுடன் அங்கு முன்னிலையாகியிருந்தார்.

இன்று முற்பகல் 9.30 மணியளவில் குறித்த

2

## சபைக்கு வரும் ஞானசார தேரர்

### கட்சி எடுத்துள்ள அதிரடி முடிவு

கொழும்பு, செப்.22

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை நாடாளுமன்றம் அனுப்புவதற்கு எங்கள் மக்கள் சக்தி கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அத்துடன், தலைமறைவாகியுள்ள பொதுச் செயலாளரை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்கள் மக்கள் சக்தி கட்சியின் சம்மேளனம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் அனுமதியின்றி தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்கு

2

## கோப் தலைவராக சரித்த ஹேரத்

கொழும்பு, செப்.22

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் (கோப்) தலைவராகப் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கோப் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் பின்வருமாறு:-

மஹிந்த அமரவீர
மஹிந்தானந்த அலுத்கமமே
ரோஹித அபேகுணவர்தன
சுசில் பிரேமஜயந்த
திலும் அமுனுகம

2

## எதிர்க்கட்சியின் எதிர்ப்பால் வெளியேறினார் அதாவுல்லா

கொழும்பு, செப்.22

அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா அணியும் உடையை எதிர்த்து இன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

அவர் அணிந்திருந்த உடை நாடாளுமன்ற நிலையியற் கட்டளையை மீறியதாகக் கூறி அதாவுல்லாவை நாடாளுமன்றத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கோரினர். அதனால் சபையிலிருந்து அதாவுல்லா வெளியேறினார்.

# அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு உடன் புனர்வாழ்வளிக்கவேண்டும்

### மகாநாயக்க பீடாதிபதிகளிடம் சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, செப்.22

அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க பீடாதிபதிகள் உடனடியாகப் புனர்வாழ்வளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பிட்டிய சுமணரதன் தேரர் என்ற ஒரு தேரரின் அடாவடித்தனத்தைப் பற்றி இந்த இடத்தில் சில வார்த்தைகளைச் சொல்லத்தான் வேண்டும்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சுமணரத்ன ........





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டக்களப்பு - பன்குடாவெளியில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

பிரதேச மக்களினால் இன்று ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அரசியல்வாதிகள், விவசாயிகள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இன நல்லுறவுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் செயற்படும் தேரரை உடன் கைதுசெய்து அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், அரச அதிகாரிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், பொலிஸார் கடமையைச் சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும் எனக் கோமிட்டு பதாதைகளை ஏந்தி தொல்பொருள் திணைக்களத்தால் அடையளப்படுத்தப்பட்ட காணியின் முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

ஞானமுத்து அன்னபூரணம் என்பவருக்குச் சொந்தமான ஒன்பது ஏக்கர் வயல் காணியை 1964ஆம் ஆண்டு அவரது மருமகள்களான தருமலிங்கம் ராணியம்மா, தருமலிங்கம் யோகமலர், தருமலிங்கம் பரமேஸ்வரி ஆகியோருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டு அவர்களினால் அன்று முதல் விவசாயம் செய்கை பண்ணப்பட்டு வந்தது. இந்தநிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குறித்த பகுதியில் புராதன சிங்கள பௌத்த சின்னங்கள், பௌத்த விகாரை என்பன இருந்தன என்று கூறி அப்பிரதேசத்தில் அசாதாரண சூழ்நிலையை உருவாக்கினார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு தொல்பொருள் அடையாளங்கள் காணப்பட்ட பகுதியில் மாத்திரம் அடையாளமிடப்பட்டு மிகுதிப் பகுதியில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குறித்த இடத்துக்கு வந்து, விகாரைக்குரிய காணி 200 ஏக்கர் உள்ளது. காணிக்கு உரிமை கோருவோர், விவசாயம் செய்பவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை வருமாறு அழைத்து அங்கு வந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மூவரைக் கடுமையாகத் தாக்கி தகரக் கொட்டில் ஒன்றுக்குள் சிறைப்பிடித்து வைத்திருந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து கரடியனாறு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று தேரருடன் கலந்துரையாடி தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை மீட்டுள்ளனர்.

தினமும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டக்களப்பு மாவட்டத்தில் செய்துவரும் அத்துமீறல்களைக் கண்டித்தும், அதிகாரிகளைத் தாக்கிய தேரரை உடன் கைதுசெய்து அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

## '20' ஐ ஆதரிக்க ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு திருத்தியமைக்கப்படும். அது தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களை முன்வைக்கலாம். அதனைவிடுத்து போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பொருத்தமற்ற நடவடிக்கையாகும்.

இன்று எதிரணி பக்கம் இருப்பவர்களில் 20 பேர் '20' ஐ ஆதரிக்கவுள்ளனர். அதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. பெயர் விபரங்களை வெளியிட விரும்பவில்லை. - என்றார்.

## அம்பிட்டிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சபையில் இந்த விகாராதிபதிக்கு எதிராக உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ள மக்களுக்காகப் பேசவேண்டும் என்று விநயமான கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

நேற்று மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் நடந்து கொண்ட விதம் தொடர்பாக திருப்தியடைய முடியாது.

அவர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் நடந்து கொண்டுள்ளார். அவர் அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

பொலிஸாரை, கிராம சேவகரை, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை வீதிக்கு வருமாறு அவர் அச்சுறுதல் விடுத்துள்ளார்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவருக்கு எதிராக இதுவரையில் சரியான முறையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது குறித்து நான் பொலிஸ்மா அதிபர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்ல விரும்புகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சிக்காலத்தில், அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்திலும் அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது கைதுசெய்யப்பட்டிருந்தார்.

எனினும், அவர் தொடர்ந்தும் அரச அதிகாரிகளுக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார். அவருக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன், அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு, அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க பீடாதிபதிகள் இணைந்து புனர்வாழ்வளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் மதகுருமாரை மதிக்கின்றோம். நாங்கள் அவர்களை மதிக்கும் அளவுக்கு அவர்களும் நடந்துகொள்ள வேண்டும்-என்றார்.

## '20' இற்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவார காலத்துக்குள் இதற்கு எதிராக யாரேனும் உயர்நீதிமன்றத்தை நாடினால் 21 நாட்களுக்கு 20ஆவது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோப் தலைவராக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்திக அனுருத்த
கலாநிதி சரத் வீரசேகர
டீ.வீ. சானக
கலாநிதி நாலக கொடஹேவா
அஜித் நிவாட் கப்ரால்
ரவுப் ஹக்கீம்
அனுர திஸாநாயக்க
பாட்டளி சம்பிக்க ரணவக்க
ஜயத் புஷ்பகுமார
ஹிரான் விக்ரமரத்ன
ரஞ்சன் ராமநாயக்க
நளின் பண்டார
எஸ்.எம். மரிக்கார்
பிரேமநாத் சீ.தொலவத்த
சாணக்கிய ராகுல ராஜபுத்திரன்

## சபைக்கு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனது பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைசெய்துகொண்ட பொதுச்செயலாளர் வெதனிகம விமலதிஸ்ஸ தேரரை கட்சியை விட்டுநீக்குவதற்கும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியின் தலைவரை நாடாளுமன்றம் அனுப்பி, அடுத்த நாளே அவர் இராஜினாமா செய்த பின்னர் அந்த இடத்துக்கு ஞானசார தேரரை நியமிப்பதற்கான யோசனைக்கும் சம்மேளனம் அனுமதி வழங்கியுள்ளது.

பொதுச்செயலாளர் நீக்கப்பட்ட விடயம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவுள்ளது.

## பூஜிதவின் வாக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆணைக்குழுவுக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, பிற்பகல் 12.10 மணிக்கு அங்கிருந்து வெளியேறினார்.

இதேவேளை, கட்டளையிடும் தளபதியாகவும், பாதுகாப்பு அமைச்சுக்குப் பொறுப்பானவராகவும், சட்டம் - ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சமயத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திறனற்றவையாகக் காணப்பட்டன என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, இந்த ஆணைக்குழுவில், கடந்த வாரம் வழங்கிய வாக்கு மூலம், முற்றிலும் பொய்யானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பில் வாய்ப்புக் கிடைத்தால்தான் தெளிவுபடுத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, இது தமது கட்சிக்காரருக்குப் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று ஹேமசிறி பெர்னாண்டோவின் சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

ஆயினும், அண்மையில் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்தை, கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையால் மறுக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டமையை, மைத்திரிபால சிறிசேனவின் சட்டத்தரணி இன்று ஆணைக்குழுவில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் ஒக்டோபர் 05ஆம் திகதியும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஒக்டோபர் 06ஆம் திகதியும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு இன்று ஆணைக்குழு அறிவித்தல் விடுத்துள்ளது.

## எதிரணியின் ..........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
20ஆவது திருத்தச் சட்ட வரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வேளை அதற்கு எதிராக எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக 20ஆவது திருத்த வரைவை வாபஸ் பெற வேண்டும் எனக் கோரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் சபைக்கு நடுவே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், திருத்த வரைவு வாபஸ் பெறப்படவில்லை.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் நோக்கில் அரசால் கொண்டுவரப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பான விவாதம் மற்றும் குழு நிலை விவாதங்கள் நடைபெறவுள்ளன. இந்தத் திருத்த வரைவுக்கான திருத்தங்கள் குழு நிலை விவாதத்தின்போது முன்வைக்கப்படவுள்ளன. இதையடுத்து அந்தச் திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்றுவதற்காக வாக்கெடுப்பு நடத்தப்படம்.

இதேவேளை, 20ஆவது திருத்த வரைவு தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளியிடும் பிரஜைகள் ஏழு நாள்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும் என நாடாளுமன்ற செயலாளரின் அலுவலகம் கூறியுள்ளது.

இதன்மூலம் 20ஆவது திருத்தச் சட்ட வரைவின் அரசமைப்பு ரீதியான செல்லுப்படித் தன்மையை சவாலுக்கு உட்படுத்த முடியும்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இடையூறின்றி இருபதாவது திருத்தம் நிறைவேறுவது தவிர்க்க முடியாதது

**புதிய பொதுஜன பெரமுன அரசினால் அரசமைப்பின் இருபதாவது திருத்தம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. நீதி அமைச்சர் அலி சப்ரி இருபதாவது திருத்தத்துக்கான வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விட்டார்.**

**இந்த வரைவு முதலில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, அவசர அவசரமாக அங்கு அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின்னர் வர்த்தமானியில் அது பிரசுரிக்கப்பட்டது.**

**ஆனால், அதன் பின்னர்தான் அத்திருத்த வரைவில் பல குறைபாடுகள் இருக்கின்றன எனத் தெரிவித்து ஆளும் தரப்புக்குள் இருந்து முணுமுணுப்புகள், சலசலப்புகள் கிளர்ந்தெழத் தொடங்கின.**

**அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் குறை கூறியது. ஆளும் தரப்பின் 'பயர் பிராண்ட்' ஆன விமல் வீரவன்ஸ பகிரங்கமாகவே கண்டனங்களை வெளியிட முன்வந்தார்.**

**இதையடுத்து, மேற்படி திருத்த வரைவில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து, விரைந்து விளக்கம் – பரிந்துரை – தருவதற்காக உயர் மட்ட அமைச்சர்கள், எம்.பிக்கள் கொண்ட குழு ஒன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைத்தார்.**

**வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வரைவு மாற்றியமைக்கப்பட்டு புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியாகும் என்றும் கூறப்பட்டது.**

**பிரதமர் நியமித்த உயர் மட்ட குழு கூடி வரைவின் சாதக பாதகங்களை – சரி, தவறுகளை – விரிவாக ஆராய்ந்து உரிய பரிந்துரைகளுடன் வந்தது.**

**அமைச்சரவையில் அந்தப் பரிந்துரைகள் பரிசீலிக்கப்படும், அதனடிப்படையில் இருபதாவது திருத்த வரைவு புதுப்பித்து மாற்றப்படும், திருத்திய புதிய வரைவு மீண்டும் வர்த்தமானியில் பிரசுரமாகும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது.**

**ஆனால், எல்லாவற்றையும் ஒரேயடியாக மூடி அடைத்தார் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ .**

**"வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இருபதாவது திருத்த வரைவுக்கு நானே பொறுப்பு. அது மாற்றப்படமாட்டாது. புதிய வர்த்தமானி அறிவித்தல் ஏதும் விடுக்கப்படமாட்டாது. வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே வடிவத்தில் அப்படியே நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றம் விரும்பினால் குழு நிலை விவாதத்தில் அதை மாற்றலாம்" என்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ஒரு போடு போட்டார்.**

**அவ்வளவுதான். 'கப்சிப்' என்ற நிலைமை.**

**தாம் நியமித்த உயர்மட்டக் குழு இருபதாவது திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து சமர்ப்பித்த பரிந்துரையை அமைச்சரவைக் கூட்டத்துக்கு எடுத்து வந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்த பரிந்துரைக் கோவையை அமைச்சரவைக் கூட்டத்தில் திறக்கக் கூட இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.**

**ஜனாதிபதியிடமிருந்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் பிடுங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் நாடாளுமன்றத்திடமிருந்தும் பிரதமரிடமிருந்தும் பறித்து ஜனாதிபதியான தமக்குக் கையளிக்கும் விதத்திலான சட்ட ஏற்பாடுகளையே இருபதாவது திருத்தமாகத் தமது நீதி அமைச்சர் மூலம் முன்வைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ .**

**இப்படியான அதிகாரக் குவிப்புத் தொடர்பாக ஆளும் தரப்புக்குள் அச்சம், முணுமுணுப்புகள் இருந்தாலும் கூட, அரசியல் ரீதியில் மிகப் பலம் பொருந்திய நிலையில், எல்லையற்ற அதிகார வலுவோடு நிற்கும் ராஜபக்ஷக்களை, நாடாளுமன்ற வாக்கெடுப்பின் போது பகிரங்கமாக எதிர்த்துச் செயற்படும் துணிவு – வலிமை – திராணி – ஆளும் தரப்பில் எவருக்கும் இருக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை.**

**அதேசமயம், எதிரணியில் இருக்கும் மலையகக் கட்சிகள் மற்றும் சில முஸ்லிம் தரப்புகள் எதிரணியில் இருந்து மதில் மேல் பூனை நிலைமைக்கு ஏற்கனவே நகர்ந்து விட்டன என்பது கண்கூடு. அவை எந்தச் சமயத்திலும் இருபதாவது திருத்தத்தை ஆதரிக்கும் களத்துக்குள் பாயலாம் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.**

**ஆக, அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம், உயர் நீதிமன்ற விசாரணை என்ற தடையைத் தாண்டியதும், எந்த விதப் பின்னடைவோ, சிக்கலோ இன்றி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு, அரசமைப்புத் திருத்தமாக நடைமுறைக்கு வருவது தவிர்க்கப்பட முடியாத நிகழ்வாக இருக்கும் என்றே தோன்றுகின்றது.**

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடு மகிழ்ச்சிக்குரியது

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை



கொழும்பு, செப்.22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிப்பதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கொழும்பு பௌத்த மஹா சம்மேளத்தில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

கேள்வி – நியாயம் கிடைக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?

பேராயர் – நான் நம்புகிறேன். அவர்கள் நேர்மையாக இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையைக் காணக்கூடியதாய் உள்ளது.

கேள்வி – ஆணைக்குழு தொடர்பில் உங்கள் கருத்து?

பேராயர் – இல்லை. ஆணைக்குழுவின் அறிக்கை வெளவரும் வரையில் காத்திருக்கிறோம். அறிக்கையின் பின்னர்தான் எமது கருத்தை தெரிவிப்போம் என்றார்.

# தலையில் சுடப்பட்ட நிலையில் பெண் சிறுத்தையின் சடலம்!

### மஸ்கெலியா தோட்டத்தில் மீட்பு



தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சிறுத்தை புலியொன்றின் சடலமொன்று மஸ்கெலியா ப்ரவன்லோ தேயிலை தோட்டத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தை புலியின் சடலம் நேற்று கண்டு பிடிக்கப்பட்டதாக நல்லதன்னி வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்கு சொந்தமான ப்ரவன்லோ தேயிலை தோட்டத்தின் பாடசாலைக்கு மேல் பகுதியில் சிறுத்தை புலியொன் றின் சடலமொன்று உள்ளதாக தோட்ட தொழிலாளர்கள் சிலரால் நல்லதன்னி வனவிலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த வனவிலங்கு அதிகாரிகள் சிறுத்தை புலியின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சுமார் 6 வயது மதிக்கத்தக்க சிறுத்தை புலி ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும், தலைப் பகுதிக்கு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட் டதால் இவ்வாறுஉயிரிழந்துள்ளதாகவும்வனவிலங்கு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுத்தை புலியை கொலை செய்த சந்தேகநபரை கைது செய்வதற்காக விசேட விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

# தங்கத்தின் விலை யாழில் வீழ்ச்சி!

யாழில்தங்கத்தின்விலை இன்று சற்று சரிவடைந்துள்ளது. கடந்த வாரம் தங்கத்தின் 3 ஆயிரத்து 500 ரூபாவால் உயர்வடைந்த நிலையில் இன்று ஆயிரத்து 500 ரூபாவால் குறைவடைந்துள்ளது.

தங்கம்இறக்குமதிமீதான வரி 15 சதவீதம் முழுமையாக நீக்கப்படுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஆம் திகதி அறிவித்த நிலையில் தங்கத்தின் விலை 10 ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படும் என எதிபார்க்கப்பட்டது.

எனினும் இறக்குமதி மீதான வரி நீக்கத்துக்கு ஏற்ப தங்கத்தின் விலையை உடனடியாக குறைக்க முடியாது என தங்கம் இறக்குமதியாளர்கள் தெரிவித்திருந்தனர்.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் இன்று 22 கரட் தங்கத்தின் விலை 91 ஆயிரத்து 700 ரூபாவாக குறைவடைந்துள்ளது. கடந்த 2 தினங்களாக ஒரு பவுண் ஆபரணத்தங்கம் 93 ஆயிரத்து 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

24 கரட் தூய தங்கம் பவுண் ஒன்று ஒரு லட்சம் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. கடந்த 2 தினங்களாக 24 கரட் தூய தங்கத்தின் விலை பவுண் ஒரு லட்சத்து ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பட்டாசு தொழிற்சாலையில் தீ விபத்து; ஒருவர் பலி!

**கொழும்பை அண்மித்த புறநகர் பகுதியான கட்டான பகுதியிலுள்ள பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.**

**நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இரவு 11 மணியளவில் பட்டாசு தொழிற்சாலை திடீரென தீப்பிடித்து எரிந்ததில் அங்கு கடமையாற்றிய பாதுகாவலர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.**

**உயிரிழந்தநபர் 65 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரிவிக்கும் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.**

# அங்கொட லொக்காவின் மனைவியின் வங்கிக் கணக்கில் 2 கோடி ரூபா பணம்!

இந்தியாவில் மறைந்திருந்த நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படும் அங்கொட லொக்கா என்ற தேடப்பட்டுவந்த பாதாள உலகக் கும்பல் தலைவன் லசந்த சந்தன பெரேராவின் மனைவியின் வங்கிக் கணக்கில் 02 கோடி வரையான பணம் இருந்திருப்பது தெரிய வந்துள்ளது.

இதுபற்றி நிதி சார்ந்த குற்றங்களைத்தடுக்கும் பிரிவு தீவிர விசாரணைகளை நடத்திவருகிறது என்று கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் பிரசன்னமான நுகேகொடை வலய குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய–ஓமல்பே பிரதேசத்தைச் சேர்ந்த அபேசிங்கசே நிசங்சலா என்ற பெண்ணின் வங்கிக் கணக்கிலேயே மேற்படி அங்கொட லொக்காவின் சில கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருப்பது விசாரணையில் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அந்தப் பெண் இலங்கை சட்டத்தின் பிரகாரம் அங்கொட லொக்காவை திருமணம் செய்து கொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 51 லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் உயர் நீதிமன்றங்களில் நிலுவையில்!



நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்களில் 51 லட்சத்து 52 ஆயிரத்து 921 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வழக்கு விவகாரங்கள் தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்பப்பட்ட நிலையில் அதற்கு பதிலளித்த அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் – உச்சநீதிமன்றத்தின் மின்னணு குழு அளித்த தகவலின்படி 16 ஆயிரத்து 845 மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

இந்த நீதிமன்றங்கள் கணினி மயமாக்கப்பட்டதன் மூலம் வழக்கைப் பதிவு செய்வதற்கான விவரங்கள், வழக்கின் நிலைவரம், தினந்தோறும் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள், இறுதித் தீர்ப்பு தொடர்பான தகவல்கள் மின்னணு நீதிமன்றங்களின் வலைதளம் அவற்றின் செல்லிடப்பேசி செயலி, கணினிமயமாக்கப்பட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் உள்ள நீதித்துறை சேவை மையங்களில் பொதுமக்களுக்கும் அவர்களின் வழக்குரைஞர்களுக்கும் கிடைக்கும்.

தற்போது 6 மாநிலங்களில் இணையவழியில் விசாரணை நடத்தும் 7 மெய்நிகர் நீதிமன்றங்கள் உள்ளன. இதில் டெல்லியில் 2மெய்நிகர்நீதிமன்றங்கள்உள்ளன.

நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்களில் 51 லட்சத்து 52 ஆயிரத்து 921 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் 36 லட்சத்து 77 ஆயிரத்து 89 உரிமையியல் வழக்குகளும் 14 லட்சத்து 75 ஆயிரம் 832 குற்றவியல் வழக்குகளும் அடங்கும்.

அதேவேளையில் மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் 94 லட்சத்து 49 ஆயிரத்து 268 உரிமையியல் வழக்குகள், 2 கோடியே 50 லட்சத்து 23 ஆயிரத்து 800 குற்றவியல் வழக்குகள் என மொத்தம் 3 கோடியே 44 லட்சத்து 73 ஆயிரத்து 68 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

# ஒரேநாளில் 74 ஆயிரம் கொரோனா தொற்றாளர்

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து செல்லும் நிலையில் நேற்று (திங்கட்கிழமை) ஒரேநாளில் புதிதாக 74 ஆயிரத்து 493 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 55 லட்சத்து 60 ஆயிரத்து 105 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் புதிதாக ஆயிரத்து 56 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 88 ஆயிரத்து 965 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 44 லட்சத்து 94 ஆயிரம் பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் 9 லட்சத்து 76 ஆயிரம் பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# அசாமில் இரு இடங்களில் நில நடுக்கம் பதிவானது!

அசாம் மாநிலத்தில் இரண்டு இடங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை அதிதீவிர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன என இந்திய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

அசாம் மாநிலத்தின் குவஹாத்திக்கு மேற்கே 44 கி.மீ தூரத்தில் 4.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது. அதிகாலை 1.28 மணிக்கு உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் 5 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், பார்பேட்டா மாவட்டத்தில் 4.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் 71 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பு காரணமாக வீட்டை விட்டு வெளியேறினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலநடுக்கங்களால் உயிரிழப்பு மற்றும் பொருள் சேதங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹாராஷ்டிரா கட்டட விபத்து: பலியானோர் எண்ணிக்கை இருபது!



மஹாரா;ஷ்டிர மாநிலம் பிவாண்டி பகுதியில் 3 மாடி குடியிருப்பு கட்டட தொகுதியொன்று இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உறங்கிக்கொண்டிருந்த பலர் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். அவர்களை மீட்கும் பணி இன்று (செவ்வாய்க்கிழமை) இரண்டாவது நாளாக இடம் பெற்று வருகிறது.

முதற்கட்டமாக 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர். அத்துடன் காயங்களுடன் மீட்கப்பட்ட 36 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 10 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது. இந்த சம்பவம் தொடர் பாக இரண்டு அதிகாரிகள் பணியிடை நீக்கம்செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளைத் திறப்பதற்கான சாத்தியம் தமிழ்நாட்டில் இல்லை – செங்கோட்டையன்



தமிழகத்தில் தற்போது பாடசாலைகளைத் திறப்பதற்கான சாத்தியம் இல்லை என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடில் இன்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது ஆந்திரா, அஸ்ஸாம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் பாடசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பான கேள்விக்கு, தமிழகத்தில் பாடசாலைகள் திறப்புக்கு தற்போதைக்கு சாத்தியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வில் தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்திலிருந்து 174 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன எனவும் இந்தியாவே வியக்கும் அளவுக்கு தமிழக அரசின் புதிய பாடத்திட்டம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முழுமையான கல்விக்கட்டணம் வசூலித்த தனியார் பாடசாலைகள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2.5 லட்சம் தனியார் பாடசாலை மாணவர்கள் அரசு பாடசாலையில் சேர்ந்த நிலையில், செப்ரெம்பர் இறுதி வரை சேர்க்கை நடக்கும் என்றும் 15 இடங்களில் தொடக்க பாடசாலைகளும் 10 இடங்களில் உயர்நிலைப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய – சீன இராணுவ உயரதிகாரிகள் மேலும் இருசுற்று பேச்சு நடத்தவுள்ளனர்




கிழக்கு லடாக் எல்லையில் பதற்றம், மோதல் போக்கை தணிப்பதற்கு இந்திய–சீன இராணுவ உயரதிகாரிகள் மேலும் இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு லடாக் எல்லையில் அமைதி திரும்ப முட்டுக்கட்டையாக நீடிக்கும் விடயங்கள் தொடர்பாக, இந்திய – சீன இராணுவ லெப்டினென்ட் ஜெனரல்கள் இடையே நேற்று 6 ஆம் கட்ட பேச்சு நடைபெற்றது. இந்த பேச்சு காலை 9 மணிக்குத் தொடங்கி, நேற்றிரவு 11 மணி வரை நீடித்தது.

இதன்போது எல்லைப் பகுதிகளில் அமைதி திரும்பச் செய்யும் வகையில், படைகளையும் மோதல் போக்கையும் விலக்கிக்கொள்வது என இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம், இன்னும் இரு சுற்று பேச்சுகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளன எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# தூங்குவதுபோல் நடிப்பவர்களை எழுப்பமுடியாது புதிய சட்டமூலம் பற்றி மோடி கருத்தும் அவ்வாறே!



## நடிகை கங்கனா ரணாவத் தெரிவிப்பு

தூங்குபவர்களை எழுப்பி விடலாம். ஆனால் தூங்குவது போல் நடிப் பவர்களை எழுப்ப முடியாது என நடிகை கங்கனா ரணாவத் தெரிவித்துள்ளார்.

வேளாண் சட்டமூலத்திற்கு எதிர்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி அந்தச் சட்டமூலத்தின் நன்மைகள் தொடர்பில் ருவிட்டரில் விளக்கமளித்துள்ளார்.

குறித்த ருவிட்டுக்கு பதிலளித்து கங்கனா ரணாவத் பதிவிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கங்கனா இட்டுள்ள பதிவில் –

பிரதமர் அவர்களே! 'தூங்குபவர்களை எழுப்பி விடலாம். ஆனால் தூங்குவது போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது' என்று பழமொழி உண்டு.

அதேபோல ஒரு விடயத்தைத் தவறாக புரிந்து கொண்டவர்களுக்கு விளக்கமளிப்பதன் மூலம் அவர்களின் எண்ணத்தை மாற்றிவிட முடியும். ஆனால் அனைத்தும் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே போராடுபவர்களை நம்மால் மாற்ற முடியாது.

குடியுரிமை திருத்தச் சட்டத்தால் எந்தக் குடிமகனும் வெளியேற்றப்படாத நிலையில் அச்சட்டத்துக்கு எதிராக வன்முறை வெறியாட்டங்களில் தீவிரவாதிகள் ஈடுபட்டனர். அந்த தீவிரவாதிகள்தான் தற்போது வேளாண் சட்டமூலத்திற்கு எதிராக போராடி வருகின்றனர் எனப் பதிவிட்டுள்ளார்.

# வெள்ளைமாளிகைக்கு விஷம் தடவிய கடிதம்; பெண் ஒருவர் கைது!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு பொதியில் கொடிய விஷம் அனுப்பப்பட்ட விவகாரத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் அனைத்து தபால்களும் 'ஆப்சைட் ஸ்கிரீனிங்' முறையில் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்டு ஜனாதிபதியின் சிறப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

அதன்படி, கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ட்ரம்புக்கு வந்த ஒரு பொதி வழக்கம்போல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்த பொதி வெள்ளை மாளிகையை அடைவதற்கு முன்பே அதிகாரிகள் அதனைத் தடுத்து சோதித்தனர்.

அதில் சந்தேகத்திற்கிடமான பொருள் இருந்ததால், பெடரல் பீரோ ஒவ் இன்வெஸ்டிகேன் (எப்.பி.ஐ.) சிறப்பு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதில் ஜனாதிபதி ட்ரம்புக்கு அனுப்பப்பட்ட பொதியில் 'ரிச்சின்' என்ற ஆபத்தான கொடிய விஷப் பவுடர் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.


இதனையடுத்து, டொனால்ட் ட்ரம்ப்பின் பெயரிட்ட பொதி எங்கிருந்து வந்தது? யார் அனுப்பியவர்? என்பது தொடர்பாக எவ்.பி.ஐ. விசாரணை நடத்தியது.

இந்த நிலையில், வெள்ளை மாளிகைக்கு ரைசின் விஷப்பொருள் அடங்கிய பொதியை அனுப்பினார் எனப் பெண் ஒருவரை எவ்.பி.ஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அமெரிக்கா – கனடா எல்லையில் கைதான அந்த பெண்ணிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இ.என்.எல். தலைவர் தொடர்பான தகவல் வழங்குவோர்க்கு 5 மில்லியன் டொலர்!

## அமெரிக்கா அறிவிப்பு




கொலம்பியா போராளிக் குழுவின் தலைவர் தொடர்பாகத் தகவல் தெரிவிப்பவர்களுக்கு ஐந்து மில்லியன் டொலர்கள் வழங்கப்படும் என அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய விடுதலை இராணுவம் எனும் போராளிக் குழுவின் தலைவர் வில்வர் வில்லேகாஸ் பலோமினோ என்பவரைக் கைதுசெய்ய உதவுபவருக்கே இந்த சன்மானம் வழங்கப்படுமென அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் மைக் பொம்பேயோ அவரது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

தென் அமெரிக்கா நாடான கொலம்பியாவுக்கு மைக் பொம்பேயோ, பயணம் மேற்கொண்ட இரண்டு நாள்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, தற்போது 38 வயதாகும் வில்வர் வில்லேகாஸ் பலோமினோ 20 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவில் கொக்கைன் போதைப் பொருள் விநியோகிக்கும் சதித் திட்டத்தில் ஈடுபட்டு வருகிறார் என அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

இ.எல்.என் என்று அறியப்படும் தேசிய விடுதலை இராணுவம் கொலம்பியாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் மார்க்சியப் போராளிக் குழுவாகும். 1959 இல் நிகழ்ந்த கியூபப் புரட்சியின் உந்துதலால் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.

கொலம்பியாவில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ் வுகளை எதிர்த்து, நிலம் மற்றும் வளங்களை சமமாகப் பிரித்து வழங்கும் நோக்கில் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் சுமார் 2 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

# பங்களாதேஷில் கொரோனா பாதிப்பு 3 லட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்தது



பங்களாதேஷில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி, பங்களாதேஷில் மூன்று லட்சத்து 50 ஆயிரத்து 621 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள 15 ஆவது நாடாக விளங்கும் பங்களாதேஷில் இதுவரை வைரஸ் தொற்றால் நான்காயிரத்து 979 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் பங்களாதேஷில் ஆயிரத்து 705 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர், 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 86 ஆயிரத்து 925 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் இதுவரை இரண்டு லட்சத்து 58 ஆயிரத்து 717 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பப்கள், மதுபானசாலைக்கு கட்டுப்பாடு

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க, இங்கிலாந்தில் உள்ள அனைத்து பப்கள், மதுபான சாலைகள், உணவகங்கள் மற்றும் பிற விருந்தோம்பல் இடங்களில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.



இதன்படி வியாழக்கிழமை முதல் இவை அனைத்து மூடப்படும் நேரம் இரவு 10 மணியாக இருக்குமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு எட்டு மணிக்கு ஒரு நேரடி ஒளிபரப்பில் பிரதமர் உரையாற்றுவதற்கு முன், இந்த நடவடிக்கைகள் வருகின்றன.

இங்கிலாந்தின் கொவிட் – 19 எச்சரிக்கை நிலை 4 இற்கு நகர்த்தப்பட்டதால் இது வருகிறது. அதாவது தொற்று பரவல் அதிக அல்லது அதிவேகமாக உயர்கிறது.

பிரதமர் பொரிஸ் ஜோன்சன் மக்கள் சமூக தொலைதூர வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும், முகக்கவசம் அணியவேண்டும், தவறாமல் கைகளைக் கழுவ வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்

# ஹோலிரூட்டில் புதிய கட்டுப்பாடுகளை குதிக்கத் தயாராகுகின்றார் நிக்கோலா

ஹோலிரூட்டில் புதிய கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை கோடிட்டுக் காட்ட நிக்கோலா ஸ்டர்ஜன் தயாராகி வருகிறார்.



முதலமைச்சர் நிக்கோலா ஸ்டர்ஜன், வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள அவரது சகாக்களுடன், பொரிஸ் ஜோன்சனுடனான கோப்ரா கூட்டத்தில் பங்கேற்க உள்ளார்.

பின்னர் அவர் மதியம் ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு முன் தனது அமைச்சரவையை சந்திப்பார்.

இங்கிலாந்தின் தலைமை மருத்துவ அதிகாரிகள் கொரோனா வைரஸ் எச்சரிக்கையை நிலை 4 இற்கு உயர்த்திய பின்னர் இது வருகிறது.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற டவுனிங்ஸ்ட்ரீட் ஊடகசந்திப்பில், ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தின் முதல் அமைச்சர்களுடன் தொலைபேசியில் பேசினார் எனவும், அவர்கள் அனைவரும் முடிந்தவரை, ஒரு ஐக்கிய அணுகுமுறையுடன், நாள்கள் மற்றும் வாரங்களில் செயற்பட ஒப்புக்கொண்டனர் எனவும் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உறுதிப்படுத்தினார்.

# டாஸ்மேனியா கடற்கரையில் சிக்கித்தவிக்கும் 270 திமிங்கிலங்களைக் காப்பாற்றப் போராட்டம்

ஆஸ்ரேலிய தீவான டாஸ்மேனியா கடற்கரையில் சிக்கித் தவிக்கும் 270 திமிங்கலங்களைக் காப்பாற்ற மீட்புப் படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.

திமிங்கலங்களில் மூன்றில் ஒரு பகுதி ஏற்கனவே இறந்துவிட்ட அச்சத்திற்கு மத்தியில், மீட்புப்பணிகள் தொடருகின்றன. ஏற்கனவே 25 பைலட் திமிங்கலங்கள் செத்து கரை ஒதுங்கியுள்ளன.

திங்களன்று, டாஸ்மேனியாவின் கரடுமுரடான மற்றும் குறைந்த மக்கள் தொகை கொண்ட மேற்கு கடற்கரையில், மேக்வாரி துறைமுகத்தில் நீண்ட கால பைலட் திமிங்கலங்கள் கம்பிகளில் சிக்கிக்கொண்டன என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு திமிங்கலமும் 7 மீற்றர் நீளம் கொண்டன எனவும், 3 டன் எடை கொண்டன எனவும் இருந்தன என மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

மேலும், டாஸ்மானியா கடற்கரையில் இதுபோன்று ஒதுங்குவது அசாதாரணமானது அல்ல. ஆனால் இந்த அளவில் ஒதுங்கியமை எதிர்பார்க்காதது. கடந்த 10 ஆண்டுகளில் இப்படி இவை கரை ஒதுங்கியது கிடையாது என்று தெரிவித்தனர்.



# முரண்பாடுகளுக்குத் தீர்வு காண கடற்றொழில்சார் தேசிய கொள்கை

## நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ்

கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தேசியக் கொள்கை ஒன்றை விரைவில் உருவாக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (செவ்வாய்க்கிழமை) கேள்வி பதில் அமர்வில் கலந்து கொண்டு பதில் அளிக்கையிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக வடக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் தொழில் நடவடிக்கை அதிகரித்துள்ளமையினால் வடக்கு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

'நீண்டகாலமாக தென்னிலங்கை மீனவர்கள் பருவ காலங்களில் வடக்கு கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற வழக்கம் காணப்படுகின்றது. அதே போன்று வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களும் பருவ காலங்களில் தென்னிலங்கையில் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இந்நிலையில், யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு கடலில் தொழிலில் ஈடுபடுகின்ற பூர்வீக உரிமையுடைய தென்னிலங்கையைச் சேரந்தவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

அனுமதி வழங்கப்பட்டிருப்பவர்களுக்கும் மேலதிகமானோர் உள்ளூர் கடற்றொழிலாளர்களுடன் இணைந்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வடக்கின் பூர்வீக கடற்றொழிலாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.



இவற்றை நீக்குவதற்காக தேசியக் கொள்கை ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது. குறித்த கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படா என்று தெரிவித்தார்.

மேலும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் காரணமாக வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் நோக்கில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருகின்ற நிலையில் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் குறித்த அத்துமீறல்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

# சுன்னாகம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் லீவு வழங்காதமையால் தற்கொலை முயற்சி!

யாழ்ப்பாணம், செப்.22

யாழ்ப்பாணம் – சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தமக்கு விடுமுறை வழங்கவில்லை என்று அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு தவறான முடிவெடுத்து தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த சம்பவம் இன்று (செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது –

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தமக்கு நீண்ட நாள்களாகியும் விடுமுறை வழங்கப்படவில்லை என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தமக்கு விடுமுறை வழங்குமாறு கேட்டுள்ளார்.

எனினும் அவருக்கு விடுமுறை வழங்கப்படவில்லை. இதனால் மன விரக்தி அடைந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் தகவல் தெரிவிக்கின்றது.



# வீதியை மூடியமையால் பாடசாலையில் குழப்பம்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் கனி;ட பாடசாலைக்கு பிள்ளைகளை கொண்டு செல்லும் பெற்றோர்கள், மாணவர்களை இறக்கிய பின்னர் மாற்று வழி மூலம் பாடசாலையிலிருந்து வெளியே செல்கிறார்கள.;

மாற்று வழியானது பாடசாலையின் மறுபுறம் உள்ள அரச விடுதிகளின் அருகில் உள்ளது.

இதனூடாக வாகனங்கள் பயணிக்கின்றமையால் தமக்கு அசௌகரியம் ஏற்படுவதாகத் தெரிவித்து அங்கு வசிக்கும் ஒருவர், வீதியின் பாதையை மூடி போக்குவரத்தைத் தடை செய்துள்ளார்.

இதனால் பல மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெரும் அசௌகரியத்திற்கு ஆளாகியமையுடன், அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து அப்பகுதியில் ஒன்றுகூடிய பெற்றோர்கள், வீதியைன மூடியதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் குழப்பமான சூழல் காணப்பட்டிருந்தது.

பின்னர் பெற்றோர்களது வேண்டுகோளிற்கிணங்க வீதி திறக்கப்பட்டது. அதன் பின்னர் நிலைமை சுமுகமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாகர்கோவில் படுகொலையின் 25 ஆம் ஆண்டு நினைவு தினம்!



நாகர்கோவிலில் 1995 ஆம் ஆண்டு இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவர்களின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினமாகும்.

இதற்கு பாதுகாப்பு தரப்பு மற்றும் வலய கல்வி திணைக்களம் என்பன பலத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

ஆகவே, பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விற்கு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் ஆறாம் ஆண்டிற்கு மேற்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை நாகர்கோவில் கிராமத்திற்கு செல்கின்ற அனைவரும் இராணுவத்தினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, ஆள்கள் பதிவு செய்யப்பட்டே அனுமதிக்கப்பட்டனர். நாகர்கோவில் வட்டார பிரதேச சபை உறுப்பினரும் பழைய மாணவனும் மாணவர்களின் பெற்றோருமான ஆ.சுரேஸ்குமார் மட்டுமே இந்த நினைவேந்தலுக்கு செல்லவிடாது பருத்தித்துறை பொலிஸாரால் தடுக்கப்பட்டார்.

மேலும், நாகர்கோவில் வடக்கு பகுதி எங்கும் இராணுவ பிரசன்னம் அதிகரித்திருந்த நிலையில், நாகர்கோவிலை சேர்ந்த படுகொலை செய்யப்பட்ட மாணவர்களது பெற்றோர்கள் உட்பட கிராம மக்களும் அச்சம் காரணமாண நினைவேந்தலில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை நாகர்கோவில் வடக்கு முருகன் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றமையுடன் அன்னதானமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்றதுடன் பொது ஈகை சுடரினை, அதிபராக பணியாற்றியிருந்த சி.மகேந்திரம் ஏற்றி வைத்து, மலர் மாலை அணிவித்ததை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்களது பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கிராமத்தவர்கள் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியமையுடன் மண்டபத்தில் நினைவுரைகளும் இடம்பெற்றன.

# நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் சம்மாந்துறையில் துப்பாக்கி மீட்பு

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளொக் ஜே கிழக்கு – 3 பகுதியில் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.



இங்கிலாந்து தயாரிப்பு ரெட்கண் ரக துப்பாக்கியொன்று மைதானம் ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை விடே அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து இன்று காலை சம்மாந்துறை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ரத்னமல தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி அத்துப்பாக்கியை மீட்டுள்ளனர். அந்த இங்கிலாந்துத் தயாரிப்பு துப்பாக்கியுடன் 6 ரவைகளும் கத்தி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மீட்கப்பட்ட துப்பாக்கி சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பு மாவட்ட அவிருத்திக்குழுவின் இணைத் தலைவராகப் பிள்ளையான் நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.



இது தொடர்பான நியமனக் கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை வழங்கி வைக்கப்பட்டது.

இவருடன், கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அநுராதா யஹம்பத்தும் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2020 இல் வெளியிடப்பெற்றது.